**தூதுவர் அலெய்னா பி. டெப்லிட்ஸ்**
**நேர்காணல்**
**ஓகஸ்ட் 19, 2021**

**கேள்வி:** எனது முதலாவது கேள்வியானது, உங்களது சமீபத்திய உரையாடலில் நீங்கள் ஊடகவியலாளர்களை சந்தித்த போது துறைமுக நகரச் சட்டம் பற்றி சிலவற்றை குறிப்பிட்டதுடன், அதில் பணமோசடிக்கான (கறுப்புப்பணம்) சில திறவுகோல்கள் இருப்பதாக நீங்கள் தெரிவித்தீர்கள். உண்மையில், குறித்த இந்த சட்டத்தின் குறிப்பான எந்த பகுதிகளை நீங்கள் அவ்வாறு பார்க்கிறீர்கள்?

**தூதுவர் டெப்லிட்ஸ்:** உங்களுக்கு தெரிந்ததன் படி, துறைமுக நகரம் தொடர்பில் ஊடகவியலாளர்களுடன் நாம் மேற்கொண்டது பெரியதொரு கலந்துரையாடலாகும். துறைமுக நகரம் ஏற்படுத்தக்கூடிய சாத்தியப்படொன்று பற்றியும் தெளிவாக நாம் பேசினோம். துறைமுக நகரத்துக்கு தாங்கள் பெற்ற முதலீடுகளில் பெரும்பாலனவற்றை அதில் மேற்கொள்ள வேண்டும் என்று இலங்கை அரசாங்கம் விரும்புகிறது என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். துறைமுக நகரத்துக்கு முதலீடுகளை கவர்வதற்கு சாத்தியமான சிறந்த வணிகச் சூழலை அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும் என்றும் பணமோசடி (கறுப்புப்பணம்), ஊழல், அதேபோல், ஒழுங்குவிதிகள் உயர் சர்வதேச தரங்களை பூர்த்தி செய்யாத பட்சத்தில் இடம்பெறக்கூடிய ஏனைய விடயங்கள் போன்ற மோசமான நடைமுறைகள் அல்லது சட்டவிரோத நிதி கையாடல்களுக்கு கூட சட்டம் மற்றும் நடைமுறைப்படுத்தப்படும் ஒழுங்குவிதிகள் எவ்வாறு கதவுகளை திறந்துவிடக்கூடும் என்பது பற்றியும் அவதானமாக இருக்க வேண்டும் என்றுமே நான் கவலை வெளியிட்டேன்.

தாங்கள் அந்த வகையான நடைமுறைகளுக்கு ஆளாகக்கப்பட மாட்டோம் என்று உத்தரவாதங்களை வணிகங்கள் விரும்பப்போவதுடன், சட்டத்தின் படி ஊழல் செயற்பாடுகளில் ஈடுபட தடை விதிக்கப்பட்டுள்ள அமெரிக்க நிறுவனங்களை பொறுத்த வரையில், சூழல் முடிந்தவரை சுத்தமாக இல்லாவிட்டால் நிச்சயமாக அவை மிகவும் கவனமாக இருக்கப் போகின்றன.

ஆகவே, இவையே அரசாங்கம் அவதானமாக இருக்க வேண்டிய விடயங்கள் என்று நான் கருதுகிறேன். அவை பிரச்சினைக்குரியவை அல்ல என்றும் இந்த வகையான மோசமான சூழலுக்கு வணிகங்கள் வெளிப்படுத்தப்பட மாட்டாது என்றும் அவர்கள் உறுதி செய்ய முயற்சிக்க வேண்டும்.

செயற்பாடொன்றின் முதலாவது அங்கமாக தயார்ப்படுத்தல் என்பது மிகவும் முக்கியம். சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பன அந்த உயர் தரங்களை பூர்த்தி செய்கின்றன என்பது உறுதிசெய்யப்பட வேண்டும்.

**கேள்வி:** இலங்கை தம்மை இந்த பிராந்தியத்தின் மையமொன்றாகவும் மற்றும் தெற்காசியாவின் நுழைவாயிலாகவும் நிலைநிறுத்திக் கொள்ள முயற்சிப்பதாக தெரிவிக்கிறது. இந்த செயற்பாட்டில் பங்குபற்றுவதில் அமெரிக்கா எந்தளவு ஆர்வத்துடன் இருக்கிறது?

**தூதுவர் டெப்லிட்ஸ்:** முதலாவதாக விடயமாக நான் சொல்வது என்னவென்றால், இலங்கையானது மிகப்பெரிய வர்த்தக மற்றும் பொருளாதார திறனை கொண்ட ஸ்தானமொன்றாகும் என்பதுடன், துறைமுகங்களை இயக்கி மற்றும் தளவாட நடவடிக்கைகளில் ஈடுபட்டு அதற்கு நிறைய அனுபவங்கள் இருக்கின்றன. ஆகவே, இந்த திறனின் பெரும்பாலனவற்றை திறப்பதற்கும் மற்றும் மேலும் பெருவாரியான வெற்றி அல்லது நிலையான வெற்றியை உருவாக்குவதற்கான திறவுகோல் என்பது முதலீடுகளை கவரக்கூடிய வெளிப்படையான பொருளாதார சூழலொன்றை கொண்டிருப்பதாகவே இருக்கப் போகிறது என்று நான் கருதுகிறேன்.

பொருளாதார ரீதியில் வலிமையான இலங்கையானது எமது இரு நாடுகளினதும் நலனுக்காக உள்ளது. அமெரிக்காவை பொறுத்த வரையில், நாம் இலங்கையில் நிலையான பொருளாதார வளர்ச்சியை பேணி வளர்ப்பதற்கு நீண்டகாலமாக உறுதிபூண்டுள்ளோம். அத்துடன், சிறந்த சர்வதேச நடைமுறைகளுக்கு ஏற்புடைய வழிகளில் நிதி நிறுவனங்களையும் மற்றும் தமது பொது நிதிகளையும் முகாமைத்துவம் செய்வதற்கு அரசாங்கத்தை அனுமதிக்கும் கொள்கைகளை

இயற்றுமாறு அரசாங்கத்தையும் நாம் ஊக்குவித்துள்ளோம். இலங்கையை நுழைவாயில் மையமாக ஏற்படுத்தும் எண்ணக்கருவை நீங்கள் விரும்பும் பட்சத்தில், மேற்படியான விடயங்களின் பிரகாரமே அவை முதலீட்டை கவர்வதற்கான சிறந்த நிலையில் இருக்கப் போகின்றன.

**கேள்வி:** ஊழல் நடைமுறைகளுக்கு மத்தியில் அமெரிக்க வணிகங்கள் அங்கம் வகிக்காது என்று மேற்படி அதே ஊடக கலந்துரையாடலின் போது நீங்கள் தெரிவித்தீர்கள். New Fortress Energy நிறுவனத்தினால் முன்மொழியப்பட்ட முதலீடு பற்றிய கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையில் நீங்கள் அதை குறிப்பிட்டீர்கள். தூதுவர் அவர்களே, உங்களது பார்வையில் இலங்கையில் காணப்படும் பிரச்சினையில் எவ்வளவு பாரதூரமானது?

**தூதுவர் டெப்லிட்ஸ்:** ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நெஷனல் (Transparency International) அமைப்பினால் தயாரிக்கப்பட்ட 2020 ஊழல் மலிவுச் சுட்டெண் (2020 Corruption Perceptions Index) பட்டியலில் 179 தரவரிசைகளில் இலங்கை 94 ஆவது இடத்தில் இருக்கிறது. அங்கு மிகவும் தெளிவாக மேம்படுத்துவதற்கு இடமிருக்கிறது. இந்தியா 86 ஆவது ஸ்தானத்திலும் சிங்கப்பூர் 3 ஆவது இடத்திலும் இருக்கின்றன. இந்த போட்டியாளர்கள் மற்றும் அயல்நாடுகளில் சிலவற்றை நெருங்கிப் பிடிப்பதற்கான நிறைய வாய்ப்புகள் இலங்கைக்கு இருக்கின்றன. அரசாங்கம் சூழலொன்று பற்றி சிந்திக்கும் போது வெளிப்படையான ஊழலுக்கான ஆபத்து தொடர்பில் அது மதிப்பீடு செய்கிறது என்பதுடன், ஊழலுக்கான சாத்தியமானது அந்த கணிப்பின் அங்கமொன்றாகும். பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கு செய்யப்பட வேண்டிய அனைத்தும் ஊழலின் காரணமாக குறைக்கப்படலாம். ஆகவே, அந்த சட்டம் உயர் சர்வதேச தரங்களை பூர்த்தி செய்கிறது என்றும் ஒப்பந்தங்கள் அமுல்படுத்தப்படுவதையும் மற்றும் இலஞ்சம் பெறுதல் அல்லது (பொதுக் கொள்கை மற்றும் பொருளாதார நிலைமைகளை சூழ்ச்சியான முறையில் கையாளுதல்) அல்லது யாதுமொரு உபகாரத்திற்கு பதிலாக சட்டவிரோதமாக பணம் செலுத்தல் அல்லது அவ்வாறான வழியில் எந்தவொரு விடயத்திற்கும் வாய்ப்பு கிடையாது என்று நடைமுறைகள் முடிந்த வரையில் சுமுகமானதாகவும் மற்றும் நெறிப்படுத்தப்பட்டதாகவும் இருக்கின்றன என்பதை உறுதிபடுத்தி அது முழுமையாக நடைமுறை படுத்தப்படுகின்றது என்றும் பிரவேசிப்பது போன்று அது இருக்கும்.

தொடர்ந்து பயன்படுத்தப்படும் வர்த்தகச் சட்டமானது சிறு மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் இலங்கையில் வளர்வதற்கான சூழலொன்றை உருவாக்க உதவ முடியும் என்று நான் கருதுகிறேன். அதேபோல், அவை அதன் பின்னர் சர்வதேச பங்காண்மையை அணுகவோ அல்லது அவற்றின் உள்நாட்டு பொருளாதாரத்தில் வளர்ச்சி காணவோ கூடியதாக இருக்கும். இது வெறுமனே வெளிநாட்டு முதலீடுகள் பற்றியது மட்டுமல்ல, இலங்கையில் சிறந்த வாய்ப்புகள் இருப்பதாக நான் கருதும் தொழில்முயற்சிகள் பற்றியதும் கூட. ஊழலை தோற்கடிப்பதன் மூலம் சிலவற்றை அடைய முடியும்.

**கேள்வி:** (கேட்கவில்லை) ஐக்கிய அமெரிக்காவில் இருந்து முதலீடுகள் மற்றும் வணிகங்களை கவர்வதற்கு இலங்கை மேம்படுத்திக் கொள்ளக்கூடிய குறிப்பான விடயப்பரப்புகள் என்னென்ன?

**தூதுவர் டெப்லிட்ஸ்:** இலகுவாக வர்த்தகம் செய்வதை தீர்ப்பதற்கு இலங்கை அரசாங்கம் வியக்கத்தக்க வகையில் உறுதியளித்துள்ளது. இது தான் Ease of Doing Business Index என்று அழைக்கப்படும் உலக வங்கியின் வருடாந்த சுட்டெண்ணாகும். தற்போதைய நிலையில், 190 நாடுகளில் 99 ஆவது ஸ்தானத்தில் இலங்கை இருக்கிறது. அந்த வகையில், முன்னேற்றம் காண்பதற்கான வழி இருக்கிறது என்பது எமக்குத் தெரியும், இல்லையா? இது சிறந்த நிலைக்கு வருவதற்கு பல வாய்ப்புகள் இருக்கின்றன. இந்த வழியில் வெற்றியை காணக்கூடியதாக இருக்கும் என்று நான் மிகவும் நம்புகிறேன்.

முதலீட்டாளர்களுக்கு பிரதானமாக முன்கூட்டியே கணிக்கக்கூடிய திறன் வேண்டும் என்று நான் கருதுகிறேன். அவர்கள் கொள்கை நிலைத்தன்மையை எதிர்பார்ப்பதுடன், முதலீட்டுக்கு சார்பான கொள்கைகளையும் அவர்கள் எதிர்பார்க்கின்றனர். ஒரு அரசாங்கத்துக்கு அப்பாலும் இந்த கொள்கைகள் நீடிக்க வேண்டும். ஆகவே, இலங்கையின் பொருளாதாரம் மற்றும் அரசியல் எதிர்காலம் பற்றிய ஒரு வகையான பகிரப்பட்ட தொலைநோக்கு பார்வையை சூழ அரசியல்வாதிகள், ஏனைய அரச தலைவர்கள், கைத்தொழில் துறை தலைவர்கள் ஒன்றுபட்டு

வரவேண்டும் என்றும் அதை உணர்ந்தறிவதற்கு நிலையான உபாயமொன்றை நடைமுறைப் படுத்துமாறும் நான் நிச்சமாக பரிந்துபேசுவேன். அவ்வாறு செய்வது நிச்சயமாக முதலீட்டாளர்கள் அடிப்படையாகக் கொண்டு முன்னேறக்கூடிய ஆரோக்கியமான பொருளாதார அடித்தளமொன்றை உறுதிப்படுத்தும்.

துறைமுக நகரம் மற்றும் ஊழல் பற்றிய எமது முன்னைய கலந்துரையாடல் தொடர்பில் நான் மீண்டும் கூறுவது என்னவெனில், ஆபத்துகளுக்கு தங்களை வெளிப்படுத்திக் கொள்ள முதலீட்டாளர்கள் விரும்பவில்லை. இது அவர்களின் அஸ்திவாரத்திற்கே சாத்தியமான பிரச்சினையொன்றாக இருப்பது மட்டுமல்லாது, அவர்கள் தங்களது பங்குதாரர்களின் ஒழுங்குப்படுத்தல் அமைப்புகளுக்கு கடப்பாடுடையவர்களாகின்றனர். அவர்களின் பணிப்பாளர்கள் சபைகள் சில அபாயங்களை ஏற்றுக்கொள்ள விரும்பப் போவதில்லை. தங்களுக்கு எதிராக விதிக்கப்படும் பொருளாதார நடவடிக்கைகளைக் கொண்டிருக்கும் நிறுவனங்களுக்கு தங்களது கம்பனிகள் வெளிப்படுத்தபட மாட்டாது அல்லது அவற்றுடன் கூட்டிணைய மாட்டாது என்பதை தெரிந்துகொள்ள அவர்கள் விரும்புவார்கள். அவர்கள் முதலீடொன்றை மேற்கொள்ள முயற்சிக்கும் போது அதை சரியான நேரத்திலும் விரைவான வழியிலும் செய்ய முடியும் என்பதை அறிந்துக்கொள்ள அவர்கள் விரும்புவார்கள். இதை சூழவுள்ள சில விடயதானங்கள் ஒப்பந்த அமுலாக்கமாக இருக்கும். நீங்கள் ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடும் போது அதை அமுலாக்கவும் முகாமைத்துவம் செய்யவும் முடியும். அனுமதி உரிமம் மற்றும் நிர்வாக ரீதியான ஒப்புதல்கள் உடனடியாகவும் சில நேரங்களில் ஒரே கூரையின் கீழ் பல்வேறு தேவைகளை பூர்த்தி செய்துகொள்வதற்கான ஸ்தானம் போன்றதொரு மூலாதாரத்தில் இருந்தும் கூட வரலாம். உற்பத்திக்கான தளத்தையோ அல்லது தங்களிடம் இருக்கும் ஏதேனுமொரு வணிக நடவடிக்கையையோ அமைத்துக் கொள்ளும் நிமித்தம் கணிகளையோ அல்லது பிற வசதிகளையோ பெற்றுக்கொள்வதில் சில எளிதான வழிமுறைகள் இருப்பதை அவர்கள் விரும்புவார்கள். அவர்கள் விலைப்பட்டியலை செலுத்தவோ அல்லது இலாபத்தை திருப்பித் தரவோ வேண்டி ஏற்பட்டால், மூலதனக் கட்டுப்பாடுகள் கிடையாது என்பதை அறிந்துக்கொள்ள அவர்கள் விரும்புவார்கள். அமெரிக்காவில் இருந்தும் அதேபோல் வேறு இடங்களில் இருந்தும் அதிக வெளிநாட்டு முதலீடுகளை நிச்சயம் கவரக்கூடிய விடயங்கள் இவைதான்.

**கேள்வி:** உங்களது பார்வையில் அமெரிக்க வணிகங்களுக்கு இலங்கையில் காணப்படும் சாத்தியமான வர்த்தக மற்றும் முதலீட்டு விடயப்பரப்புகள் என்னென்ன?

**தூதுவர் டெப்லிட்ஸ்:** அமெரிக்க தனியார் துறையானது அமெரிக்க அரசாங்கத்தினால் இயக்கப்படவில்லை. வர்த்தக வாய்ப்புகள் மற்றும் வர்த்தக தேவைகளின் அடிப்படையில் அவர்கள் தங்களுக்கான தீர்மானத்தை எடுக்கிறார்கள். அதேநேரம், இங்கு அதிகமான முதலீடுகளை காண விரும்புகிறேன். இலங்கையை நோக்கி பார்ப்பதற்கு அமெரிக்க வணிகங்களை ஊக்குவிப்பதற்கும் எமது வணிகங்களின் வர்த்தக நலன்களுக்காக பரிந்துபேசுவதற்கும் அமெரிக்க தூதரகம் கடினமாக உழைத்து வருகிறது. இது எமது பணியின் அங்கமொன்றாகும். இது வெளிநாடுகளிலுள்ள இலங்கை தூதரகங்கள் உட்பட ஒவ்வொரு வெளிநாட்டு தூதரகங்களினதும் பணியின் அங்கமொன்றாகும்.

சில துறைகள் அதிக சாத்தியப்பாட்டை கொண்டிருக்கின்றன என்று நான் கருதுகிறேன். அரசாங்கத்தின் முன்னுரிமைகளாக ஜனாதிபதி ராஜபக்ஷ அவராகவே குறிப்பிட்ட விடயதானங்களுடன் ஒரே வரிசையில் சேரும் விடயங்களே அவை. நிச்சயமாக அவை தொழில்நுட்ப மற்றும் எரிசக்தி துறைகளாகவே இருக்கும் என்பதுடன், எரிசக்தி துறைக்குள் புதுப்பிக்கத்தக்க விடயங்கள் பற்றி சிந்திக்கப்படுகிறது. இவையே அமெரிக்க வணிகங்களுக்கு வலுவான துறைகள் என்பதுடன், சில சாத்தியப்பாடுகளையும் வழங்குகின்றன.

New Fortress Energy பற்றி நீங்கள் முன்னையதொரு கேள்வியில் குறிப்பிட்டீர்கள். New Fortress Energy இற்கும் அரசாங்கத்துக்கும் இடையிலான அண்மைய கட்டமைப்பு ஒப்பந்தத்தினால் நான் ஊக்குவிக்கப்பட்டேன். இலங்கையின் எரிசக்தி துறையில் புகழ்பெற்ற அமெரிக்க நிறுவனமொன்று முதலீட்டை கொண்டிருப்பதானது உலகளாவிய முதலீட்டாளர் சமூகத்துக்கு வலுவான நேர்மறை சமிக்ஞைகளை அனுப்பப் போவதுடன், வணிகங்களை மேற்கொள்வதற்கு இது சிறந்த ஸ்தானம் என்பதை காண்பிப்பதற்கு இந்த மாதிரியான அதிக முதலீடுகளை இலங்கை உண்மையில் ஈர்க்க வேண்டும்.

**கேள்வி:** தூதுவர் அவர்களே, Quad நட்பு நிலை பற்றியதொரு கேள்வி. Quad ஐ பொறுத்த வரையில் இலங்கையிடமிருந்து அமெரிக்க எதை எதிர்பார்க்கிறது?

**தூதுவர் டெப்லிட்ஸ்:** சற்று பின்நோக்கி சென்று Quad என்றால் என்ன என்பதை சிந்தித்து பார்ப்பது உதவியாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். Quad என்பது நாற்கரம் (Quadrilateral) என்பதற்கான சுருக்கம் மட்டுமே. அதாவது நான்கு நாடுகள் - இந்தியா, ஜப்பான், ஐக்கிய அமெரிக்கா மற்றும் அவுஸ்திரேலியா. 2004 ஆம் ஆண்டு சுனாமி பதிலளிப்பின் நிமித்தம் உண்மையில் கூட்டமொன்று நடைபெற்ற போதே Quad ஆரம்பத்தில் ஒன்று கூடியது. 2007 ஆம் ஆண்டில் அது இராஜதந்திர ரீதியிலான கலந்துரையாடலாக உருவானது. பின்னர் 2017 ஆம் ஆண்டு அதுவொரு பரந்த உரையாடலாக ஒருவித மீள் உருவாக்கம் பெற்றது. ஆகவே, அது நெருக்கடியில் இருந்து உருவானதொரு ஒன்றுகூடலாகும். எனினும், அதன் பின்னர் இந்தோ-பசுபிக் பிராந்தியத்துக்கான பகிரப்பட்ட தொலைநோக்கு பார்வையொன்றை கொண்ட நான்கு நாடுகளின் ஒன்றுகூடலாக அது உருவெடுத்தது. நிச்சயமாக அந்த தொலைநோக்கு பார்வையானது சுதந்திரமான, திறந்த, மீளெழுச்சித்திறனுடைய மற்றும் அனைவரும் உள்வாங்கப்பட்ட பரப்பெல்லையொன்றுக்கானதாகும். உலகின் இந்த பரந்த பிராந்தியமானது அணுகக்கூடியதாக, இயக்கநிலை கொண்டதாக இருப்பதையும் சர்வதேச சட்டங்களினால் நிர்வகிக்கப்படுவதையும் மற்றும் இந்த பரப்பெல்லையை நிர்வகிக்கும் விதிகளாக கடற்பயண சுதந்திரம் மற்றும் பிணக்குகளுக்கு அமைதியான தீர்வு போன்ற முக்கிய அடிப்படைக் கொள்கைகள் இருப்பதையும் உறுதிசெய்ய நாம் விரும்புகிறோம்.

அத்துடன், நாடுகள் நிர்ப்பந்தம் எதுவுமின்றி அவற்றின் சொந்த கொள்கை தீர்மானங்களை மேற்கொள்ள கூடியதாக இருப்பதை உறுதிப்படுத்தவும் நாம் நிச்சயமாக விரும்புகிறோம்.

ஆகவே, இது தான் பின்னணி என்பதை அமெரிக்கா புரிந்து கொண்டுள்ளது. அனைவரும் உள்வாங்கப்பட்டதாகவும் செழிப்பாகவும் இருக்கக்கூடிய சிறந்த மற்றும் சிறப்பாக நிர்வகிக்கப்படும் பொருளாதாரங்களை எவ்வாறு கொண்டிருப்பது என்பதை சிந்தித்துப் பார்த்தல் உட்பட கடற்பயண சுதந்திரம் போன்ற சுந்திரங்கள் உள்ளிட்ட அடிப்படை சுதந்திரங்கள், ஜனாநாயகம், மனித உரிமைகள் ஆகியவற்றை சுற்றியுள்ள பகிரப்பட்ட விழுமியங்களை அடிப்படையாகக் கொண்டு நாம் முன்னேற முடியும் என்று இந்த பிராந்தியத்தில் உள்ள அனைத்து நாடுகள் சார்பிலும் அமெரிக்கா நிச்சயம் எதிர்பார்க்கிறது. எமது இருதரப்பு உறவில் நாம் எதை நோக்கி செயற்படுகிறோம் என்பதை விடவும் இதில் வித்தியாசம் கிடையாது என்று நான் கருதுகிறேன். ஐக்கிய அமெரிக்கா என்பது நான்கு வழி உரையாடலொன்றின் ஓரங்கம் மட்டுமே. அது இந்த இலக்குகளை ஊக்குவிக்கவும் எதிர்பார்க்கிறது.

இவை பொதுவாக இலங்கை பகிர வேண்டிய இலக்குகளாகும். இதுவொரு ஜனநாயக மற்றும் கடல்வழி வர்த்தகத்தில் ஈடுபடும் நாடு. ஆகவே, இந்த இலக்குகளை ஊக்குவிக்க எம்மால் ஒன்றிணைந்து பணியாற்ற முடியும் என்று நாம் நம்புகிறோம்.

**கேள்வி:** அணிசேரா மற்றும் நடுநிலை கொள்கையே தமது வெளியுறவு கொள்கை என்று இலங்கை அரசாங்கம் அடிக்கடி தெரிவித்து வந்துள்ளது. ஆகவே, இந்த நிலைப்பாடு அமெரிக்காவினால் எவ்வளவு தூரம் ஏற்றுக்கொள்ளக் கூடியது?

**தூதுவர் டெப்லிட்ஸ்:** இலங்கை என்பது இறையாண்மையுடைய நாடொன்றாகும். ஏனைய நாடுகளுடன் எவ்வாறு தங்களது உறவுகளை நிர்வகிக்க வேண்டும் என்பதை உண்மையில் இலங்கை மக்களே தீர்மானிக்க வேண்டும். இலங்கை மற்றும் ஏனைய எந்த நாடென்றாலும் சரி அவற்றின் உறவுகள் திறந்ததாகவும் வெளிப்படையானதாகவும் பரஸ்பரம் நன்மை தருவதாகவும் இருக்க முடியும் என்று நாம் எதிர்பார்க்கிறோம் என்ற அபிப்பிராயத்தையே நாம் எப்போதும் வெளியிடுகிறோம். அவ்வாறானதொரு உறவையே இலங்கையுடன் அமெரிக்கா கொண்டுள்ளது என்று நாம் நம்புகிறோம். அதற்கு மேலும், எம்மிடையே பங்காண்மையொன்று, அதாவது இருவழி பாதையாக (பரஸ்பர கொடுக்கல் வாங்கல் தொடர்பு) இருக்க வேண்டிய பங்காண்மையொன்றை இருக்கிறது. வெளிப்படையான அபிப்பிராய பரிமாற்றம், உங்களது விழுமியங்கள் மற்றும் நலன்களை சுற்றிய ஒத்துழைப்பு போன்றவற்றை அது அனுமதிக்கிறது. நான் பரஸ்பர உதவியை

கூட பரிந்துரைக்கிறேன். எமது பங்காண்மையானது 70 வருடங்களுக்கு மேல் நீண்டது. அவற்றில் 60 ஆண்டுகளாக நாம் இலங்கைக்கு அபிவிருத்தி உதவிகளை வழங்கியுள்ளோம். விவசாயம் தொடக்கம் கல்வி, சுகாதாரம், வீடமைப்பு, நீர் சுத்திகரிப்பு, சுற்றுச்சூழல், நுண் தொழில்முயற்சி உதவி வரை என ஏறத்தாழ அனைத்து துறைகளுக்கும் உதவியுள்ளோம். நீங்கள் தான் அவற்றை தெரிவு செய்தீர்கள். உதவி வழங்குவதற்கும், இயக்குவோர் ஸ்தானத்தில் இலங்கையர்களை வைப்பதற்கு முயற்சிப்பதற்கும், வாழ்க்கைத் தரத்தை உயர்த்த, சமூகங்களை கட்டியெழுப்ப மற்றும் தன்னிறைவை ஸ்தாபிக்க முயற்சிப்பதற்குமே நாம் அங்கிருந்தோம் என்று நான் நினைக்கிறேன்.

ஆகவே, வணிக நடவடிக்கையொன்றுக்கும் மேலான உறவொன்றுக்கு நாம் மிகவும் உறுதிபூண்டுள்ளோம். அது உண்மையில் ஒரு பங்காண்மையாகும். ஆகவே, அவ்வாறு தான் நாம் எமது இருதரப்பு உறவுகளை பார்க்கிறோம்.

**கேள்வி:** இலங்கை – அமெரிக்க உறவுகள் பற்றி நாம் பேசும் போது அது பன்முகத்தன்மை கொண்டது என்பதுடன், அதில் பல்வேறு அம்சங்கள் காணப்படுகின்றன. இந்த உறவின் அதிகப்படியான தரத்தை நீங்கள் பார்க்கும் போது, இந்த அம்சங்கள் எவ்வாறு தொடர்பு படுகின்றன?

**தூதுவர் டெப்லிட்ஸ்:** பொருளாதார வளர்ச்சி, அதாவது அனைவரும் உள்வாங்கப்பட்ட பொருளாதார வளர்ச்சி, மற்றும் கடல்வழிப் பாதைகள் மற்றும் உள்வாங்கப்பட்ட பொருளாதார வலயங்களை பாதுகாத்தல் அல்லது அனர்த்த பதிலளிப்புக்கு உதவுதல் ஆகிய விடயங்களை போன்ற பாதுகாப்பு ஒத்துழைப்பு என இந்த விடயங்கள் அனைத்தும் ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்த நலன்களாகும் என்பதுடன், இந்தோ-பசுபிக் பிராந்தியத்தில் அமெரிக்கவுக்கு பரந்தளவிலான நலன்கள் இருக்கின்றன. கடற்பயண சுதந்திரம் போன்ற அடிப்படைக் கொள்கைகள் மற்றும் விழுமியங்கள் சம்பந்தமாக முன்னதாக அவற்றில் சிலவற்றை நான் குறிப்பிட்டதை நீங்கள் சுட்டிக்காட்டினீர்கள். இவை அனைத்தும் எமது பாதுகாப்பு ஒத்துழைப்புடனும் மற்றும் ஜனநாயக ஆட்சிமுறைக்கு (அழைப்பு) விடுக்கும் (கேட்கவில்லை) சந்தர்ப்பத்துடனும் தொடர்புடையவை.

ஆகவே, இவை ஒன்றோடொன்று தொடர்புடைய அம்சங்கள் என்றும் ஜனநாயக நாடுகள் என்ற வகையில் அமெரிக்காவும் இலங்கையும் உண்மையில் பொதுவான இலக்குகளை பகிர்ந்து கொள்ள வேண்டும் என்றும் நான் கருதுகிறேன். நல்லாட்சி, சட்டத்தின் ஆட்சி மற்றும் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்க எம்மால் ஒன்றிணைந்து பணியாற்ற முடியும். அத்துடன், அனைத்து பிரஜைகளினதும் உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்துவதற்கும், இலங்கையின் சுபீட்சத்தை உறுதி செய்யவும் ஊக்குவிக்கவும், மற்றும் அதன் இறையாண்மையை பாதுகாப்பதற்கும் ஜனாதிபதி ராஜபக்ஷவுடனும் அரசாங்கத்துடனும் நாம் நிச்சயமாக தொடர்ந்தும் செயற்படுவோம்.

ஐ.நா.வின் நிலையான அபிவிருத்தி இலக்குகளுக்கு இலங்கை அரசாங்கம் உறுதியளித்துள்ளது என்பதுடன், இந்த பரந்தளவிலான விவகாரங்களையும் அவர்கள் உள்ளடக்கியிருப்பதையும் நான் குறிப்பிடுகிறேன். ஒரு விடயம் தொடர்பில் மாத்திரம் நீங்கள் செயற்பட முடியாது என்பது இதன் முக்கிய அங்கமொன்றாகும் என்று நான் நம்புகிறேன். மிகச் சரியாக நீங்கள் குறிப்பிட்டதைப் போன்று இவை அனைத்தும் ஒன்றோடொன்று தொடர்புடையவை என்பதால் அவை அனைத்தையும் பற்றி நீங்கள் செயற்பட வேண்டும்.

**கேள்வி:** இலங்கை நிதி நெருக்கடிக்கு முகம் கொடுத்துவரும் தற்போதைய பின்னணியில் நிதியுதவி மற்றும் ஒத்துழைப்புகளுக்கு இலங்கை சீனாவிலேயே பெரிதும் தங்கியுள்ளதாக சில கவலை தெரிவிக்கின்றனர். இலங்கைக்கு அமெரிக்காவினால் எவ்வாறு உதவ முடியும்?

**தூதுவர் டெப்லிட்ஸ்:** அமெரிக்காவிடம் இருந்தான உதவியை திருப்பிச் செலுத்த வேண்டியதில்லை. உண்மையில், நாம் கடன்களை வழங்குவதில்லை. இலங்கையர்கள் தமக்கு தாமே உதவிக் கொள்வதற்கு உதவுவதற்கும் மற்றும் பல்வேறு துறைகள் எங்கிலும் அதேபோல், இலங்கைக்கு அதிகம் தேவைப்படும் விடயங்களிலும் ஆற்றல் மற்றும் மீளெழுச்சி திறன்களை உருவாக்குவதற்குமே நாம் இங்கு இருக்கிறோம். அத்துடன், இலங்கையின் பொருளாதார திறனுக்கு உண்மையான பெறுபேறுகளுடன் நாம் 70 ஆண்டுகளுக்கு மேலாக நீண்டகால உறுதிப்பாடொன்றை

கொண்டிருக்கிறோம். (தெளிவில்லை). இந்த விடயங்களானது அமெரிக்காவின் அனுசரணையிலான அபிவிருத்தி உதவி முயற்சிகளில் இருந்து வந்தவையாகும். அத்துடன், பெரும் எண்ணிக்கையிலான தொழில் பயிற்சியும் கூட. இலங்கையின் சிறு மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளை அபிவிருத்தி செய்வது தொடர்பில் நாம் தற்போது கவனம் செலுத்துகிறோம். இலங்கையின் பொருளாதாரத்தை மேலும் பாதிப்படையச் செய்திருக்கக்கூடிய அவசரநிலைகளுக்கு பதிலளிப்பதிலும் நாம் பங்களிப்பு செய்திருக்கிறோம். 2004 ஆம் ஆண்டு சுனாமி மற்றும் 2017 ஆம் ஆண்டு வெள்ளப்பெருக்கை நீங்கள் குறிப்பிட்டீர்கள். நிச்சயமாக தற்போது இந்த பெருந்தொற்றிலும் கூட.

அந்த வகையில், அண்மையில் நாம் இலங்கைக்கு 1.5 மில்லியன் மொடர்னா தடுப்பூசிகளை இலங்கைக்கு இலவசமாக வழங்கினோம். இது COVAX ஸ்தாபனத்தின் ஊடாக வந்தது. எனினும், அவை ஐக்கிய அமெரிக்காவின் கையிருப்பில் இருந்தே வந்தன. அவை எமது தற்போதைய அர்ப்பணிப்பின் அங்கமொன்றாகும். அதற்கு மேலதிகமாக, நேரடியாகவோ அல்லது பொருளாதாரம் முன்னோக்கி செல்வதில் ஏற்படக்கூடிய தாக்கங்களை தணிப்பதற்கு உதவும் முயற்சியாகவோ கொவிட் நெருக்கடியை நிவர்த்தி செய்வதற்கு நாம் 8 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் அதிகமான தொகையை வழங்கியுள்ளோம். எடுத்துச் செல்லக்கூடிய 200 செயற்கை சுவாசக் கருவிகள் (வென்டிலேட்டர்) மற்றும் 5 இலட்சத்துக்கும் மேற்பட்ட விரைந்து நோய்க் கண்டறியும் சோதனை உபகரணங்கள் (rapid diagnostic tests) என அதேபோன்ற நன்கொடைகளையும் நாம் மேலதிகமாக வழங்கியுள்ளோம்.

ஆகவே, பொருளாதாரத்தை வளர்ப்பதற்கும் அதேநேரம், நாம் தற்போது முகம்கொடுத்துக் கொண்டிருக்கும் பெருந்தொற்று உட்பட வரக்கூடிய நெருக்கடிகளை முகாமைத்துவம் செய்து பதிலளிப்பதற்குமான திறனாற்றலை ஏற்படுத்த இலங்கையர்களுக்கு உதவுவதில் ஒன்றே எமது அணுகுமுறையாகும்.

**கேள்வி:** அண்மையில் நீங்கள் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷவை சந்தித்து பேசியிருந்தீர்கள். அங்கு கலந்துரையாடப்பட்ட விடயங்களின் அடிப்படையில் என்ன மாதிரியான உறுதியான முன்னேற்றங்கள் அதன் பின்னர் மேற்கொள்ளப்பட்டுள்ளன?

**தூதுவர் டெப்லிட்ஸ்:** நிதியமைச்சருடன் நாம் சிறப்பான சந்திப்பொன்றை மேற்கொண்டிருந்தோம். அது மிகவும் சுமுகமாக அமைந்திருந்தது. முதலீடு பற்றி பேசுவதற்கு எமக்கு சிறந்த சந்தர்ப்பமொன்று கிடைத்திருந்தது. இதுவே பெரும்பாலும் இங்கு எமது உரையாடலின் தலைப்பாக இருந்தது. முதலீட்டாளர்கள் முகம்கொடுக்கும் சில சவால்கள், வரையறைகள், மற்றும் திறந்ததும் வெளிப்படையானதுமான சூழலுக்கான அவசியம் பற்றியும் நாம் கலந்துபேசினோம். நிச்சயமாக, முதலீட்டாளர்கள் ஆபத்தான சூழலுக்கு வெளிப்படுத்தப்படுவதை மட்டுப்படுத்தல் மற்றும் இலங்கை சிறந்த நடைமுறைகள் மற்றும் உயர் சர்வதேச விதிமுறைகளை கடைபிடிக்கக் கூடிய அதன் வணிகச் சூழல் தொடர்பில் செயற்பாடுகளை முன்னெடுக்கிறது என்ற வகையிலான நம்பிக்கை போன்ற விடயங்கள் பற்றியும் கலந்துரையாடினோம்.

இலங்கை உயர்தரத்திலான முதலீட்டளர்களை ஈர்ப்பதை காண நான் விரும்புகிறேன். நிச்சயமாக இந்த அபிப்பிராயத்தை நான் நிதியமைச்சரிடமும் தெரிவித்தேன்.

இலங்கையின் பொருளாதாரம் பற்றிய கவலைகள் தொடர்பில் நான் பகிரங்கமாகவும் தெரிவித்த விடயங்களையும் நான் அவருடன் பகிர்ந்து கொண்டேன். அது தற்போதைய தருணத்தில் சிறந்த ஆரோக்கியமான நிலையில் இல்லை. தற்போதைய பெருந்தொற்று நிலைமை காரணமாக உலகளாவிய ரீதியில் இது மிகவும் கடினமான காலம். ஆகவே, சர்வதேச நாணய நிதியத்தினால் வழங்கப்பட்ட வளங்களை பயன்படுத்துவதே இலங்கைக்கு தீர்வுக்கான ஒரு அங்கமாக இருக்கும் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.

இலங்கை, சர்வதேச நாணய நிதியத்தின் உறுப்பு நாடொன்றாகும். இலங்கையும் ஏனைய 188 நாடுகளும் அந்த அங்கத்துவம் கொண்டுள்ள சர்வதேச நாணய நிதியமானது, வறுமைக்கு எதிராக போராடுவதற்கும் அதேபோல், உலகளாவிய நிதி ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்தவும் மற்றும் உலகளாவிய வேலைவாய்ப்பு தேவைகளை தீர்க்க உதவுவதற்குமே ஸ்தாபிக்கப்பட்டது. ஆகவே,

இந்த தருணத்தில் இலங்கைக்கு தேவையான மிகச் சரியான கருவி இதுதான் என்று நான் கருதுகிறேன்.

ஆகவே, நாம் அது பற்றியும் உரையாடினோம். உறுப்பு நாடென்ற வகையில் இலங்கை சர்வதேச நாணய நிதியத்தின் வளங்களை அதிகப்பட்ச நன்மைகளை பெற பயன்படுத்துமாறும் இலங்கையின் பொருளாதார செயலாக்கத்தை மதிப்பீடு செய்வதற்கு வருகைத் தரக்கூடிய கருவிகளில் இருந்து பயனை பெற்றுக்கொள்ளுமாறும் மற்றும் மேலும் உறுதியான முன்னோக்கிய பொருளாதார அடித்தளமொன்றை ஏற்படுத்தும் மாற்றங்களில் எவ்வாறு ஈடுபடுவது என்பது பற்றி நிச்சயம் சிந்திக்குமாறும் அரசாங்கத்தை நான் தொடர்ந்தும் வலியுறுத்துகிறேன்.

**கேள்வி:** ஆப்கானிஸ்தானில் நிலவும் சூழ்நிலை குறித்து நான் இறுதியாக கேட்க விரும்புகிறேன். இரு தசாப்தங்களுக்கு பிறகு ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கா வெளியேறியுள்ளது. பிராந்தியத்தின் சமாதானத்தை பொறுத்த வரையில் அமெரிக்காவின் அடுத்த வகிபாகம் என்னவாக இருக்கும்?

**தூதுவர் டெப்லிட்ஸ்:** பலரைப் போல நானும் இடம்பெறும் நிகழ்வுகளை பார்த்துக் கொண்டிருக்கிறேன் என்றே நான் கூறுவேன். ஆப்கானிஸ்தானில் இருந்த வரும் பல படங்கள் மிகவும் கவலை அளிப்பதாக இருக்கின்றன. விமானநிலையத்தில் நிலைமை சீராக்கப்பட்டுள்ளது என்றும் வெளியேற்றப்படும் நடவடிக்கைகள் நடைபெற்று வருவதாகவும் நான் அறிகிறேன். அத்துடன், பரந்த சர்வதேச சமூகத்துடன் உடன் சேர்ந்து நாம் ஆப்கானிஸ்தானின் அயல்நாடுகளுடனும் பிராந்தியத்திலுள்ள ஏனைய நாடுகளுடனும் நாம் ஒருங்கிணைப்புகளை மேற்கொண்டு வருகிறோம்.

வளர்ந்து வரும் நிலைமைக்கு சீரமைக்கப்பட்ட அணுமுறையொன்று இருப்பதை உறுதி செய்ய நாம் விரும்புகிறோம். அத்துடன், ஒன்று அல்லது இரண்டு நாட்களுக்கு முன்னர் வெளியான அறிக்கையொன்றின் மூலம் இந்த முயற்சியின் பெறுபேறுகளை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்று நான் கருதுகிறேன். வெளிநாட்டு பிரஜைகள் மற்றும் நாட்டைவிட்டு வெளியேற விரும்பும் ஆப்கானிஸ்தான் பிரஜைகள் பாதுகாப்பாகவும் ஒழுங்கான முறையிலும் வெளியேறுவதை மதித்து அதற்கு வசதியளிக்குமாறு சம்பந்தப்பட்ட தரப்பினரை வலியுறுத்தி 106 நாடுகள் தற்போது இணைந்துள்ளன என்று நான் கருதுகிறேன்.

அனைத்து விரோதப் போக்கையும் நிறுத்துமாறும் அனைவரும் உள்வாங்கப்பட்ட பேச்சுவார்த்தைகளின் ஊடாக புதிய அரசாங்கமொன்றை அமைப்பது தொடர்பிலும் வலியுறுத்தி ஐ.நா. பாதுகாப்பு சபையும் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. இவை தான் உடனடியான அடுத்த கட்ட நடவடிக்கைகள் என்றும் இந்த தருணத்தில் வெளிப்படையாகவே மிகவும் கடினமான சூழ்நிலையில் பணியாற்ற வேண்டி எமக்கு ஏற்பட்டுள்ளது என்றும் நான் கருதுகிறேன். இந்த பிராந்தியத்திலும் பரந்த சர்வதேச சமூகத்தின் மத்தியிலும் நாம் ஒத்துழைப்புடன் இதை செய்ய வேண்டும்.

**கேள்வி:** (கேட்கவில்லை)? இது தொடர்பில் இலங்கை அரசாங்கதை நீங்கள் நீங்கள் தொடர்பு கொண்டீர்களா?

**தூதுவர் டெப்லிட்ஸ்:** ஆம், எமது அபிப்பிராயங்கள் மற்றும் கரிசணைகளை இலங்கை அரசாங்கத்துடன் பகிர்ந்து கொள்வதன் நிமித்தம் நாம் உரையாடல்களை மேற்கொண்டோம் என்பதுடன், அவை நடைபெற்று வரும் அந்த உலகளாவிய கலந்துரையாடலின் அங்கமொன்றாகவே இருக்கும்.

**கேள்வி:** தூதுவர் அவர்களே, இந்த நேர்காணலின் நிமித்தம் நேரம் ஒதுக்கியமைக்கு நன்றி. நான் உங்களை மீண்டும் சந்திக்க எதிர்பார்க்கிறேன்.

**தூதுவர் டெப்லிட்ஸ்:** நன்றி, (கெலும்). இந்த வாய்ப்பை நான் மெச்சுகிறேன்.

# # # #